பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

..ண் 33 ஆண்டு 19 இதழ் 105
சனிக்கிழமை 27-5-78

UNIVERSITY OF SRI LANKA RECEIVED 1978-5-29 PERIODICALS DIVISION LIBRARY ★ JAFFNA

## அட்டனில் கைதான வாமதேவனுக்கு காலவரையின்றி ரிமாண்ட்

(கொழும்பு)

முருங்கனை சி. ஐ. டி. பொலிசார் படுகொலை தொடர்பாக அட்டனில் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த வாமதேவன் நேற்று கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு ரணராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட போது வாமதேவனை காலவரையறையின்றி ரிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

துப்பறியும் பொலிசாரின் படுகொலை தொடர்பான விசாரணைக்கு வாமதேவன் தொடர்ந்தும் தேவைப்படுவதாக பொலிசார் நீதிபதியிடம் தெரிவித்ததையடுத்தே நீதிபதி அவரை காலவரையறையின்றி ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

தனம் அல்லது தனபால் சிங்கம் என்று அழைக்கப்படும் வாமதேவன் நேற்றுக் காலை 9-15 மணியளவில் கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு பலத்த காவலுடன் அழைத்துவரப்பட்டார்.

[மே பக்கம் பார்க்க]

# "மக்கள் இயக்கமாக கூட்டுறவுத்துறையை மாற்ற ஆலோசனை வழங்குவோம்"

## யாழ். நகரில் நீதி அமைச்சர் 'தேவா'

[யாழ்ப்பாணம்]

மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களின் கட்டும் மீண்டும் கூட்டுறவு இயக்கம் நடைபெறத்தக்கவிதமாக இந்த இயக்கத்தை மாற்றியமைக்க அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கவிருக்கிறோம். சில சமயம் இதைக் கொண்டு வர தாமதமாகலாம். 6 மாதகாலத்தில் எங்களுடைய அறிக்கையைசமர்ப்பிப்போம்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றுவரும், கூட்டுறவு புனரமைப்பு விசாரணைக் குழுவிற்கு நேற்று தலைமைதாங்கிய நீதிஅமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் தேவநாயகம் தொடர்ந்து கூறியதாவது:


எமது அரசு கூட்டுறவு இயக்கத்தை சரியான பாதையில் கொண்டுசெல்வதற்கென இந்தக் குழுவை நியமித்திருக்கிறது. அதை உடனடியாகச் செய்வதற்கு முடியாமல் இருக்கிறது. ஏனெனில் இந்த இயக்கத்தை மூன்றுகப் பரிசீலனை செய்து இதற்கு முன் கடந்த 7 ஆண்டுகளுக்குள் கொண்டு வந்த சீர்திருத்தம்பற்றி ஆராய்ந்து இதுசம்பந்தமான உங்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து, அதை நல்ல அமைப்பாக கொண்டுவர நாம் ஆலோசித்துவருகிறோம்.

நாங்கள் விரும்புவது உடனடியாக கிளைச்சங்கங்களுக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்து பிரச்னையை முடிவுக்கு கொண்டுவருவதல்ல. ஏழு, எட்டு வருடங்களாக கிளை அங்கத்தவர்களுக்கு கூட்டுறவில் பங்குகொள்ளும் வாய்ப்பு மறுக்கப்பட்டு வந்திருக்கிறது.

மாவட்டரீதியிலான இயக்கத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். முன்பு ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள எல்லா சமாசத்திலும் அங்கம் வகித்தன. மாவட்ட சமாசத்திலேதான் தங்களுக்கு என்ன தேவை என்பதை கிளை அங்கத்தவர்கள் தெரிவித்திருப்பார்கள். அப்படியான ஒரு அமைப்பை அல்லது அதே அடிப்படையில் அதையொத்த ஒரு அமைப்பை உருவாக்கவே முயற்சி செய்கிறோம்.

மாவட்ட சங்கத்தில் ஒவ்வொரு வருடமும் மாநாடு

[6ம் பக்கம் பார்க்க]



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நீதியமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் தலைமையில் கூட்டுறவு புனரமைப்பு விசாரணைக் கமிஷன் விசாரணை நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்

### நீதி அமைச்சர் கலந்துகொள்வார்

[யாழ்ப்பாணம்]

யாழ். முஸ்லிம் சமூகசேவை சங்கத்தின் ஆதரவில் இன்று இரவு நடக்கும் பகிரங்க கூட்டத்தில் நீதிஅமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் கலந்துகொள்வார்.

மேற்படி சங்க மண்டபத்தில் நடக்கும் இக்கூட்டத்தில் பலாங்கொடை எம். பி. திரு. எம். எம். அபுசாலி, தெனியாய எம். பி திரு. கே. அபயவிக்கிரம, மாவத்தகம எம். பி. திரு. ஜி. எம். பிரேமரத்தின ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். [s]

## ஹெலிகோப்டரில் 'தேவா' யாழ். வந்தார்

[யாழ்ப்பாணம்]

கூட்டுறவு புனரமைப்புவிசாரணைக் கமிஷன் தலைவரான நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் நேற்று இலைச்சிங்கங்களும் மாவிட்டபுரத்திலிருந்து விமானமூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

பலாலியிலிருந்து ஹெலிகோப்டர்மூலம் யாழ்ப்பாணம் கோட்டைக்கு வந்தடைந்த அமைச்சர் தேவநாயகம், கோட்டையிலிருந்து காரில் நண்பகல் 11-30 மணிக்கு விசாரணை மண்டபத்தை வந்தடைந்தார்.

மண்டபத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சாட்சியமளிக்கவந்தவர்களும் பார்வையாளர்களும் சோதனையிடப்பட்ட பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். [ச-இ]

### கூட்டணி எம். பி.க்கள் இன்று சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சித் தலைவர் திரு ஏ. அமிர்தலிங்கமும் மற்றும் 10 வடபகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களும் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு நீதியமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் தலைமையிலான, கூட்டுறவு விசாரணைக் குழுமுன் சாட்சியமளிப்பார்கள்.

இன்று காலை விசாரணைக்குழு சில சங்கங்களை நேரில் பார்வையிடும். [s]

### ஜெகசிற்பியன் காலமானார்

சென்னை, மே 26

பிரபல தமிழ் எழுத்தாளர் திரு ஜெகசிற்பியன் இன்று சென்னையில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 53.

## தமிழ் ஈழ விடுதலைப்புலி இயக்கம்: தகுதிவாய்ந்த அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் இதுபோன்ற இயக்கங்கள் ஆகியவற்றைத் தடைசெய்யும் சட்டத்தை அமுலாக்கல் தொடர்பான அமைச்சராக பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. வேரப்பிட்டிய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்புதிய சட்டத்திற்கமைய மேற்படி தடைசெய்யப்பட்ட தமிழ்ஈழப் புலிகள் இயக்கம் பற்றியோ அதுபோன்ற இயக்கங்கள் பற்றியோ அல்லது இதில் சம்பந்தப்பட்ட ஒருவர் பற்றியோ செய்திகள் வெளியிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இதற்கான தகுதிவாய்ந்த அதிகாரியாக தகவல் ஒலி

(6-ம் பக்கம் பார்க்க)

இறக்குமதி செய்யப்பட்ட CITIZEN

மற்றும் கைக்கடிகாரங்களும் கிடைக்குமிடம்

நா. சரம்பசிவம் அன் கோ.,
யாழ்ப்பாணம். 9347

## கல்வியில் அடிக்கடி மாற்றம் மாணவரைப் பாதிக்கிறது

### சென். ஜோன்ஸ் அதிபர் அறிக்கை

[அரியாலை]

தனியார் கல்லூரிகள் இந்த நாட்டின் கல்விக்குச் சிறந்த சேவையாற்றி வருகின்றன என்றும், அக்கல்லூரிகளுக்கு இன்று இருக்கும் பிரச்னைகளில் சிலவற்றைத் தீர்த்துவைக்க அரசு முன்வந்திருப்பதாகவும் கல்விஅமைச்சர் தனியார் கல்

[6-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

வைதுளத்தி கூட்டுறவுதில் அனுபவமுள்ள பெண்பிள்ளை கள் உடன் தேவை. எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். அண்ணு இண்டஸ்றீஸ், இணுவில். 9378

அனுபவம் வாய்ந்த தச்சு மேசன் தொழிலாளர்கள் ஆயுத வசதிகளுடன் தேவை. 28-05-78 காலை 8 மணி முதல் மாலை 3 மணிக்குள் நேரடியாகச் சமுகமளிக்கவும். இ.இ.பி.நி, 70, புங்கன்குளம், தெரு, யாழ்ப்பாணம். 9395

யாழ். மாநகரசபை எல்லைக்குள் குளாய் நீர், மற்றும் சகல வசதிகளுடனும் 4 படுக்கை அறைகளுக்கு குறையாத ஓர் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: A. ராஜரத்தினம், "வசந்த" ஆனைக்கோட்டை. 9401

## தவறிவிட்டது

25-5-78 வியாழக்கிழமை பித்தளை பாவித்த மூக்குக் கண்ணாடியும் 2 கூடும் துணிப்பையுடன் சென்றல் ஹொஸ்டல் சந்தும் மணிக்கூட்டு வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் மிக்பாருக்கு முன்னுள்ளிருக்கும் யாழ். ஐஸ் வியாபாரச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 9403

## வைத்தியம்

அரிய சந்தர்ப்பம்! உலகப் பிரசித்தி பெற்ற இந்தியன் ஹோமியோபதி சர்வகலாசாலையின் இணைக்கப்பட்ட கிளை விரைவில் நாம் ஹோமியோபதி வைத்தியர்களுக்கு மூன்று மாதம் பயிற்சியை வழங்கி அனுமதியான சான்றிதழ் வழங்குகிறோம். ஹோமியோபதி வைத்திய வகுப்புகளும் நடைபெறுகின்றன. விபரங்களுக்கு எழுதுக: ஜெ: பீரு தெனல், தலைவர், அதிகாரி, ஹோமியோபதி றோயல் கல்லூரி, 20, ஜும்ஆ மஸ்ஜித் லேன், யாழ்ப்பாணம். 9397

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள போர்ட்ஸர், EL 1000 தொடர்பில் கிரமுடைய சொந்தப் பாவனையிலுள்ளது. ஒரிஜினல் பீஸ் டன். உடன் விற்பனைக்குண்டு 7, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 9402

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாணம் இவன் பண்ணை வீதி, 35-ம் இலக்கத்தைச் சேர்ந்த சதாசிவம் வைத்திலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணச்சொத்து நியாயாதிக்கம் இல. 3353

வைத்திலிங்கம் கைம்பெண் கமலாம்பிகை, 35, இவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1978-ம் ஆண்டு ஆடி மாதம் 7-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்கள்; 1968-ம் ஆண்டு தை மாதம் 17-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி ஒப்பம்

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

வரைவு:
இ. சிவகணேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.

9345

## விற்பனைக்கு

இயக்கச்சி கண்டிரோட்டுக்கு அருகாமையில் 15 ஏக்கர் பற்றைக்காணி, பனை மரங்கள் உண்டு. மிளகாய் செய்கை, தென்னை, மா, பலா செய்கைக்கு உகந்த நிலம். தொடர்பு: S. T. கஸ்பார், கண்டி ரோட்டு, மிருசுவில். 9391

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் காலஞ்சென்ற பருத்தித்துறை வியாபாரிமூலை என்னும் இடத்தைச் சேர்ந்த நடராசா இராசரத்தினம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில், மரணமெய்தியவர்.

இராசரத்தினம் ஜெகதீஸ்வரி வியாபாரிமூலை பருத்தித்துறை மனுதார்.

எதிர்

1. இராசரத்தினம் ஆனந்த ஜோதி.
2. இராசரத்தினம் சாந்த ஜோதி.
3. இராசரத்தினம் வசந்த ஜோதி. எல்லாரும் பராயமற்றவர்கள் தங்கள் காதுகாவலர் 4ம் எதிர்வாதி மூலமாக.
4. நடராசா இராசமாணிக்கம் பாதுகாவலர். வியாபாரிமூலை பருத்தித்துறை எதிர்வாதிகள்.

மரணசாதன நியாயாதிக்கம்: இல. 1644T

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு ஆனி மாதம் 23ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி ஒப்பம்
(க. விஸ்வலிங்கம்)
பதிவாளர்

வரைதல்
ஒப்பம்: S. நாகலிங்கமுதலி
மனுதாரின் சட்டத்தரணி
1978ம் ஆண்டு வைகாசி மாதம் 8ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 9404

# அதிர்ஷ்டசாலி யார்?

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 664வது தேசிய சுவீப்பின் முதல் மூன்று முடிவுகளும் பின்வருமாறு:

முதலாம் பரிசு
**39 V 0115**
ரூபா 1, 00, 000

இரண்டாவது பரிசு
**63 V 0171**
ரூபா 40, 000

மூன்றாவது பரிசு
**09 K 0240**
ரூபா 10, 000

தலா 1522 ரூபா 50 சதம் பெறும் 100 ஆறுதல் பரிசுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 08 A 0775 | 38 A 0263 |
| 38 A 0331 | 13 B 0867 |
| 27 B 0249 | 21 C 0411 |
| 28 C 0668 | 03 D 0239 |
| 47 D 0223 | 49 D 0397 |
| 05 E 0977 | 25 E 0110 |
| 34 E 0299 | 37 E 0724 |
| 52 E 0069 | 54 E 0234 |
| 61 E 0860 | 35 F 0904 |
| 37 F 0496 | 45 F 0084 |
| 07 G 0291 | 11 G 0758 |
| 12 G 0380 | 14 G 0514 |
| 23 G 0878 | 53 G 0776 |
| 59 G 0282 | 12 H 0708 |
| 28 H 0202 | 53 H 0584 |
| 57 H 0318 | 14 J 0289 |
| 39 J 0448 | 20 K 0027 |
| 35 K 0436 | 01 L 0117 |
| 06 L 0138 | 38 L 0580 |
| 17 M 0321 | 18 M 0396 |
| 27 M 0737 | 39 M 0510 |
| 55 M 0891 | 64 M 0052 |
| 64 M 0066 | 30 N 0067 |
| 54 N 0506 | 57 N 0808 |
| 58 N 0521 | 62 N 0146 |
| 15 O 0455 | 37 O 0576 |
| 23 P 0498 | 32 P 0367 |
| 44 P 0387 | 46 P 0771 |
| 52 P 0763 | 12 Q 0279 |
| 18 Q 0221 | 51 Q 0799 |
| 18 R 0048 | 18 R 0835 |

| | |
|---|---|
| 30 R 0601 | 55 R 0840 |
| 63 R 0196 | 09 S 0501 |
| 24 S 0864 | 36 S 0418 |
| 60 S 0663 | 61 S 0786 |
| 54 S 0132 | 04 T 0683 |
| 12 T 0468 | 17 T 0030 |
| 27 T 0007 | 42 T 0543 |
| 44 T 0177 | 62 T 0440 |
| 01 U 0423 | 05 U 0504 |
| 19 U 0811 | 22 U 0863 |
| 12 V 0161 | 15 V 0060 |
| 23 V 0112 | 62 V 0861 |
| 03 W 0444 | 06 W 0112 |
| 18 W 0772 | 54 W 0103 |
| 17 X 0147 | 20 X 0540 |
| 39 X 0256 | 07 Y 0254 |
| 08 Y 0881 | 10 Y 0373 |
| 16 Y 0917 | 42 Y 0179 |
| 04 Z 0087 | 12 Z 0571 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை)

## 10-வது ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை உள்ளூராட்சிமன்ற சித்தஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்க பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவும் மலர் வெளியீடும் யாழ்ப்பாணம் நாகவிகாரை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது. (உ)

## கல்விச்சுற்றுலா

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கனிஷ்ட வகுப்பு மாணவ மாணவிகள் அச்சுவேலியிலுள்ள கைத்தொழில் பேட்டையைச்சுற்றிப்பார்வையிட்டனர்.

ஆசிரியர்கள் சகிதம் கைத்தொழில் பேட்டைக்கு விஜயம் செய்த மாணவ மாணவிகளை ஜெனரல் இண்டஸ்ரீஸ் பொறுப்பாளர்களான திரு. எஸ். விஜயமூர்த்தி திரு. எம். சத்தியநாதனும் அழைத்துச் சென்று கைத்தொழில் பேட்டையை காட்டினர். (உ)

# விளம்பரம்

கைதடி வடிசாலையில் ஒரு இணை வெட்டுவதற்குத் தனிப்பட்டவர்கள், கொந்தராத்துக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 78-06-10க்கு முன்னர் உதவிப் பிரதேச முகாமையாளர், அரச வடிசாலைகள் கட்டுத்தாபனம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். இடத்தைப் பார்வையிடவும், மற்றும் விபரங்கட்கும் கைதடி வடிசாலையில், வடிசாலை அதிகாரியுடன் தொடர்புகொள்ளவும்.

உதவிப் பிரதேச முகாமையாளர்,
அரசவடிசாலைகள் கட்டுத்தாபனம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7621, யாழ்ப்பாணம். 9399

# அறிவித்தல்

அனலைதீவு சக்காதிக் கலட்டி சங்கர மூர்த்தி (சங்கரநாதர்) முருகமூர்த்தி கோயிலின் முதலாவது பராபரிப்புத்தத்துவகாரன் வேலுப்பிள்ளை குமாரசாமி ஆகிய நான் இதனால் வெளிவரங்கப்படுத்துகிறதாவது:

யாழ்ப்பாணம் நொத்தாரிஸ் திரு. அ. சொக்கலிங்கம் அவர்களால் 1977ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19ந் திகதி 3104ம் இலக்கத்தில் உறுதிபண்ணி அத்தாட்சிப்படுத்திய பராபரிப்புத் தத்துவகாரனாக இருந்து வருகிறேன் என்றும் நான் குறித்த கோயிலின் பராபரிப்புத் தத்துவகாரனாக மேலும் தொடர்ந்து நடத்திவர எனது உடல்நலம் போதாமையாலும் வேறு சொந்தக் காரணங்களாலும் குறித்த கோயிலின் நிர்வாகத்தையும் அதன் சொத்துக்களின் பராபரிப்பையும் பொதுமக்களாகிய உங்களிடம் ஒப்படைக்க விரும்புகிறேன். இதன் தொடர்பாக என்னுடன் தொடர்புகொள்ளவிரும்புபவர்கள் தயவுசெய்து இன்று முதல் இரண்டு மாசங்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

வே. குமாரசாமி
பராபரிப்புத் தத்துவகாரன்,
அனலைதீவு சங்கரமூர்த்தி முருகமூர்த்தி கோவில்.

அனலைதீவு.
20-5-78

9400

## சிகிச்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் பலாலி கிராம அபிவிருத்தி மண்டபத்தில் உள்ள ஆயுர்வேத இலவச வைத்தியசாலையில் கர்ப்பிணிகள், குழந்தைகள் பராமரிப்பு சிகிச்சை நிலையத்தை மாதம் ஒருமுறை நடத்துவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையத்தை காங்கேசன்துறைப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பி.கே. செல்லத்துரை திறந்துவைத்தார்.

வசாவிளான்கிராமத்திற்கும் அயல் கிராமத்தவர்களுக்கும் இந்நிலையம் பெரிதும் பயன்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## நாகதம்பிரான் பொங்கல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள புதூர் நாகதம்பிரான் வருடாந்த பொங்கல்விழா அடுத்தமாதம் 5ம் திகதி நடைபெறவிருக்கிறது.

# பிஸ்கால் விற்பனை அறிவித்தல்

வடமாகாணம், நீதவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை

பொன்னையா கார்த்திகேசு, கருங்காலி, காரைநகர் மேற்கு.

வழக்கு இல: 175 — வழக்காளி

எதிர்

(இறந்தவர்) முருகேசு கைம்பெண் பொன்னுப்பிள்ளை, கருங்காலி, காரைநகர் மேற்கு.

முருகேசு கணபதிப்பிள்ளை, கருங்காலி, காரைநகர் மேற்கு, காலஞ்சென்ற முருகேசு கைம்பெண் பொன்னுப்பிள்ளையின் சொத்துக்கு சட்டபூர்வமான பிரதிநிதி,

எதிராளி

எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் 1978ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி 11 மணியிலிருந்து இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தைக் குறித்த காணிக்குள் நின்று பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது. இவ்விற்பனைத் தொகையிலிருந்து கடன்தொகைரூபா498/83ம், மேலும் இந்நீதிமன்றச் செலவு ரூபா 461/69, நடைபெற்ற செலவு ரூபா 290/12, நடைபெறவேண்டிய செலவு ரூபா 100/89, மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 70/68.

## ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் தீவுப்பகுதி, காரைதீவுக் கோவிற்பற்று, காரைதீவு மேற்கிறை.

1 உரலியபுரம் நி. ம. 3/4, சொரியலாய் 5/6க்கு நெடுங்காலமாக நிந்தமாக ஆட்சிபண்ணிவந்தபடி, நி. 2 13/24 இரண்டோடு இருபத்திநாலில் பதின்மூன்றும், வீடுகளும், பனைகளும், மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு கார்த்திகேசு பொன்னையாவினுதனம், வடக்கும் மேற்கும் வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளையினுதனம். தெற்கு கந்தையா அருணாசலத்தினுதனம். இதடங்கலிற் சொரியலாய் ¼ நாலிலொரு பங்கு மதற்குரியவைகளும். கிழக்கெல்லைக் காணியின் வடக்குப் பக்கமாக இக்காணிக்குப் போக்குவரவு செய்யும், நி. ப. ½ அரையின் பாவிப்புரித்தும்.

2 இவை நீரகணவை நெ. பு 10 உறுதிப்படி எல்லை கிழக்கு கந்தப்பு சண்முகத்தினுதனம், வடக்கு கணபதிப்பிள்ளை பெண் அன்னமுத்துவினுதனம், மேற்கு சுந்தரம்பிள்ளை பெண் பொன்னுப்பிள்ளையினுரித்தாளரினுதனம். தெற்கு பொன்னம்பலம் பெண் பொன்னம்மாவினுதனம். இதடங்கலிற் சொரியலாய் ¼, நாலிலொரு பங்கு.

9398

தா. குலஞானம்
பிஸ்காலும், பதிவாளரும்,
நீதவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை.

## லிபரல் கட்சி ஆதரவு வாபஸ்

# பிரிட்டனில் கலகன் ஆட்சி கவிழும் நிலை?

லண்டன், மே. 26

பிரிட்டிஷ் ஆட்சி கவிழும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதுவரை ஆளும் தொழிற் கட்சிக்கு ஆதரவளித்துவந்த லிபரல் கட்சி தனது ஆதரவை வாபஸ் பெறவிருப்பதனை அடுத்தே இந் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

லிபரல் கட்சி தனது ஆதரவை வாபஸ் பெற்றால் பிரதமர் திரு. ஜேம்ஸ் கலகன் உரிய காலத்துக்கு முதலே பொதுத் தேர்தலை நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

லிபரல் கட்சியின் 13 உறுப்பினர்கள் ஆளும் தொழிற் கட்சிக்கு ஆதரவளித்து வந்தனர்.

மக்கள் சபையின் கூட்டத்தொடர் முடிவடைந்ததும் தொழிற் கட்சிக்கான தமது ஆதரவு வாபஸ் பெறப்படும் என்று லிபரல் கட்சி தெரிவித்துள்ளது.

லிபரல் கட்சி விலகினும் தொழிற்கட்சிக்கு ஏனைய கட்சிகளிலும் பார்க்க பத்து ஸ்தானங்கள் குறைவாக இருக்கும். [உ]

## 5 ஆண்டுகளுக்குள்

# 3 லட்சம் இராமங்களுக்கு மின்வசதி

— அமைச்சர்

சென்னை, மே 26

பாரதத்தில் மின்சாரவசதி இல்லாத மூன்று லட்சம் கிராமங்களுக்கு மின்சாரவசதி ஐந்து ஆண்டுத் திட்டத்தில் பூர்த்தியாக்கப்படும் என்று மத்திய எரிபொருள் அமைச்சர் திரு. பி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வடஆற்காடு மாவட்டத்தில் நேற்று தமக்களிக்கப்பட்ட வரவேற்புவைபவத்தில் பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு சொன்னார்.

மத்திய அரசு நாட்டு நலனுக்காக ஆற்றிவரும் பணிகள் பற்றியும் அமைச்சர் விபரித்தார். [உ]

## பொறியியல் விரிவுரை: கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக வளாகங்களில் பொறியியல் விரிவுரைகள் நிகழ்த்துவதற்குப் பொறியியலாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் அமைச்சுக்களின் கடமையாற்றும் பொறியியலாளர்களின் உதவி நாடப் பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

களாக வைத்திய போதனா பீடங்களில் விரிவுரையாற்ற டாக்டர்கள் போதாதிருப்பதனால் டாக்டர்களைக் கொடுத்துதவச் சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

## "ஆங்கிலத்தின் முக்கியத்துவம்: நம் நாடு உணர்கிறது'

[உடுப்பிட்டி]

"எமது நாட்டில் இன்று ஆங்கில மொழியின் முக்கியத்துவம் அதிகரித்துவருகின்றது. சர்வதேச மொழியான ஆங்கிலத்தை நாம் புறக்கணித்ததனாலேயே பொருளாதார ரீதியிலும், கலாசார ரீதியிலும் பெரிதும் பாதிப்படைந்தோம். வெளிநாடுகளுக்குச் சென்று உயர் கல்வி பெறவும், வேலைவாய்ப்புகள் பெறவும் ஆங்கிலம் இன்றியமையாததாக விளங்குகிறது. இதனை நன்குணர்ந்தே இன்றைய அரசாங்கம் ஆங்கில மொழிக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளதோடு முதியோர்களுக்கான ஆங்கிலக் கல்வி வகுப்புக்களையும் ஆரம்பித்துள்ளது."

இவ்வாறு பாடசாலையை விட்டு வெளியேறியவர்களுக்கும், முதியோர்களுக்குமான வார இறுதி ஆங்கிலக் கல்வி வகுப்பை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்துவைத்துப் பேசிய ஆங்கில ஆசிரியர் திரு. பி. சின்னத்தம்பி குறிப்பிட்டார்.

திரு. பி. சின்னத்தம்பி மேலும் பேசுகையில் "தாய்மொழியுடன் சர்வதேச மொழியை ஒவ்வொரு பிள்ளைகளும் நன்கு அறிந்திருக்க வேண்டும். இல்லாவிடின் வெளிநாட்டவர்களுடன் தொடர்பு கொள்ளமுடியாது கஷ்டம் அடையவேண்டியிருக்கும். தாய்மொழியில் கல்வி பயின்று, உயர் பதவி வகிப்போர் இத்தகைய சிரமத்திற்குள்ளாகிவருவதைக் காணக் கூடியதாக உள்ளது" என்று கூறினார்.

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரத்தில் ஆரம்பித்துவைக்கப் பட்டுள்ள முதலாவது முதியோர்களுக்கான இவ்வாங்கிலப் பயிற்சி வகுப்பில் மாணவர்களும், மாணவிகளும் கலந்துகொண்டனர். [உ]

## தற்காலிக பதவிநீக்கம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஏ. ஐ. டி. வல்லியர் என்பவரை தாக்கி காயம் விளைவித்ததாகவும் அவரது கடமையைச்செய்ய விடாது தடுத்ததாகவும் கூறி மேற்படி தொழிற்சாலை ஊழியரான ஏ. கந்தையா என்பவர் தொழிற்சாலை முகாமையாளரால் தற்காலிகப் பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளார். (உ)

## இலவச ஆங்கிலக்கல்வி

(நெல்லியடி)

முதியோர்களுக்கான ஆங்கில வகுப்பு ஒன்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆரம்பமாகியுள்ளது.

வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் இந்த ஆங்கில வகுப்புக்கள் இலவசமாக நடாத்தப்படுகின்றன. இவ்வாங்கில வகுப்புக்களை ஹாட்லிக்கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சாமுவேல் எந்தவிதசன்மானமும் இன்றி நடாத்த முன்வந்துள்ளார்.

## "ஸயர் சமர்:

# கியூபாவுக்கு முக்கிய பங்கு உண்டு"

### கார்ட்டர் கண்டனம்

வாஷிங்டன், மே 26

ஸயரில் நடைபெற்ற சமரில் கியூபாவுக்கு முக்கிய பங்கு உண்டென்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் தொலைக்காட்சியில் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது திரு. கார்ட்டர் இக்கண்டனத்தைத் தெரிவித்தார்.

ஷாவா மாகாணத்தில் நடைபெற்றதாக்குதலுக்கு அங்கோலாவும் கியூபாவுமே பொறுப்பேற்கவேண்டும் என்று கூறிய அவர், ஸயருக்கு அமெரிக்காவின் உதவி மிகவும் மட்டுப் படுத்தப்பட்டதாகவே இருக்கும் என்றும் தெரிவித்தார். [உ]

## "துருக்கியின் போக்கில் மாறுதல் வேண்டும்"

— சைப்பிரஸ் ஜனாதிபதி

லண்டன், மே. 26

சைப்பிரஸ் விவகாரத்தில் துருக்கியின் போக்கில் மாற்றம் ஏற்பட வேண்டும் என சைப்பிரஸ் ஜனாதிபதி திரு. கிப்பிரியானோ கூறியுள்ளார்.

நியுயோர்க்கில் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் சைரஸ் வான்சைச் சந்தித்து உரையாடியபின் நிருபர்களிடம் பேசும்போது ஜனாதிபதி தமது கருத்தை வெளியிட்டார்.

சைப்பிரஸில் இரு பெரும் சமூகங்களுக்குமிடையிலான சமரசப் பேச்சுவார்த்தைகளைத் தாம் எதிர்ப்பதாகவும் அவர் சொன்னார்.

துருக்கிக்கான ஆயுத விநியோகத் தடையை அமெரிக்கா நீக்கக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (உ)

## கோண்டாவில்

# ஸ்ரீவாகீஸ்வரி ச.ச. நிலைய பொன் விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையத்தினர் தமது 50 வது ஆண்டு நிறைவை பொன் விழாவாகப் பெரிய அளவில் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ்விழாவை யொட்டி இன்று முதல் 29-ம் திகதி பிற்பகல் வரை விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன.

விளையாட்டுப் போட்டியைப் பிரபலநாடக நடிகரும் நிலையத்தலைவருமான திரு. எம். சிவரத்தினம் கொடியேற்றி ஆரம்பித்து வைப்பார்.

29-ம் திகதி நடைபெறும் பரிசளிப்புவிழாவில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ள விருக்கிறார். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

பரிசளிப்புவிழாவை நல்லூர் எம். பி. எம். சிவசிதம்பரம் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்.

விழா திரு. எம். சிவரத்தினம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் அன்னக்கிளி உன்னைத்தேடுதே சாணக்கியன் என்ற நாடகங்களும் விழாவில் இடம் பெறும். அறிஞர் பெருஞ்சித்திரனும் கலந்து கொள்வார். (உ)

## பூட்டோ மீதான தீர்ப்பு:

# வெளிநாடுகள் பாக். நீதி பரிபாலனத்தில் தலையீடு

### தேசிய கூட்டணி கண்டனம்

லாகூர், மே 26

முன்னாள் பாகிஸ்தான் ஜனாதிபதி சுல்பிகார் அலி பூட்டோவுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை குறித்து கருணைகாட்டுமாறு வெளிநாடுகள் கோரிவருவதை பாகிஸ்தான் தேசிய கூட்டணி கண்டித்துள்ளது. இது பாகிஸ்தானின் நீதிபரிபாலனத்தில் வெளிநாடுகள் தலையிடுவதைக் காட்டுகிறது என்று தேசிய கூட்டணி கூறியுள்ளது.

பூட்டோ தமக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை எதிர்த்து தாக்கல்செய்துள்ள அப்பீல் மனு உயர்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## நிருபர்கள் சங்கம் கண்டனம்

லண்டன், மே 26

பாகிஸ்தானில் நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்கள் இம்சிக்கப்படுவது குறித்து தெற்காசிய வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள் சங்கம், பாகிஸ்தான் இராணுவ அரசைக் கண்டித்துள்ளது. [இ]

## புங்குடுதீவில் நீர் விநியோகம்

(வேலணை)

புங்குடுதீவுக்கு இன்றுமுதல் குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளது. தீவுப்பகுதியில் ஏற்பட்டுள்ள கடும்வெப்பத்தினால் குடிநீரின்றி புங்குடுதீவு மக்கள் கஷ்டப்படுவதை சமூகசேவை அமைச்சின் கவனத்திற்கு காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கொண்டுவந்ததை யடுத்து இந்த ஏற்பாடு செய்யப்படுகின்றது.

கடந்தவருடம் அரசாங்க சேவைப்பகுதியினரே குடிநீர் விநியோகம் செய்துவந்தனர். இம்முறை தனியார் துறையினருக்கு டெண்டர் மூலம் நீர்விநியோக வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ)

## வைத்தீஸ்வர மைதானத்தில்

# நாளை நடைபெறும் போட்டி

(யாழ்ப்பாணம்)

'மில்க்வைற்' வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து துடுப்பெடுத்தாடும் இறுதிப் போட்டி நாளை நடைபெறுகிறது.

வைத்தீஸ்வரவித்தியாலய மைதானத்தில் நாளை நண்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை ஆறுமணிவரை நடைபெறும் இப்போட்டியில், யாழ். தபால்தந்தித்திணைக்கள ஊழியர்களும் தந்தி பொறியியல் ஊழியர்களும் மோதிக் கொள்கின்றனர்.

யாழ். தபால்தந்தி திணைக்கள விளையாட்டு வீரர்கள் வருமாறு:

திருவாளர்கள் பீலேந்திரன், ஹையசிந்த், கனகசுந்தரம், ஆனந்தசிவம், மரியதாஸ், ஜேர்ஜ்பேக்கர், அன்ரன் சேவியர், எமில் ஆத்மஜோதி, சிவசுப்பிரமணியம், கிறிஸ்து ராஜா, செல்வராஜா, உதவியாளர்கள்: திருவாளர்கள் கில்வரட்ணம், யேசுதாசன், இரத்தினலிங்கம், கணேசமூர்த்தி.

தந்தி பொறியியல் விளையாட்டு வீரர்கள் வருமாறு: சிவநேசராஜலிங்கம், பாலசுப்பிரமணியம், சண்முகராஜா, ஈஸ்வரானந்தன், தெய்வேந்திரமூர்த்தி, நாகராஜா, இங்கிலிசார்லிஸ் ஞானப்பிரகாசம், செல்லத்துரை, குலேந்திரன், யேசுதாஸன், உதவியாளர்: மனோகரன், அன்ரன் பேதுருப்பிள்ளை, இராசையா.

## சைக்கிள் திருட்டு

[நெல்லியடி]

பருத்தித்துறை நீதிமன்ற வளவினுள் நிறுத்தப்பட்டிருந்த ஒரு துவிச்சக்கரவண்டி திருட்டும் போயுள்ளது. இச் சைக்கிள் வண்டி ஒரு சட்டத்தரணியினுடையதாகும். இத் திருட்டு சம்பந்தமாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. [உ]

**நகாம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
ரஜனிகாந்த் - ஸ்ரீதேவி
நடித்த
**மூன்று முடிச்சு**

**வெஸ்லி**
(காங்கேசன்துறை)
தினசரி 6-30, 9-45
ஜெய்சங்கர்-பத்மினி
நடித்த
**பெண் தெய்வம்**


## அபராதத்துடன் பறிமுதல்

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதி கடற் பிரதேசத்தில் உத்தரவு இன்றி மணல் கொண்டு சென்லோர் பருத்தித்துறை பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் திரு. கேசவதாசன் முன்னிலையில் ஆஜர் செய்யப் படுகின்றனர். உத்தரவுப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற வாகன உரிமையாளர்களுக்கு தண்டனை வழங்கப்படுவதுடன் மணலும் நீதிமன்றவளவினுள் கொட்டுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (உ)

## சைவத் தொண்டர் சதாசிவம்பிள்ளை

நாம் செய்த பூர்வபுண்ணியப் பயனாக மனிதப்பிறவி கிடைக்கிறது. மனித உருவில் தேவர்களும் வருவதுண்டு. தேவகுணம் படைத்தவரே அமரர் திரு. இ. சதாசிவம் பிள்ளை. 1960ல் இருந்து 1965 வரையிலான காலம் புண்ணிய காலமாகும். அநுராதபுரத்திலுள்ள மக்களுக்கு விசேடமாக சைவமக்களுக்கு திரு. சதாசிவம் பிள்ளையுடன் சேர்ந்து தொண்டு செய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

அநுரதபுரியில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள கலியுக வரதனும் கதிரேசப் பெருமான் மீது ஆராத பக்தி கொண்ட இவர், பழைய நகரில் இருந்த கதிரேசன் ஆலயத்தைப் புதிய நகரில் நிர்மாணித்து 9-9-64ல் பெருஞ் சாந்தியாம் கும்பாபிஷேகம் நிகழ அரும்பாடுபட்டுழைத்தவர்களில் முன்னின்று பெருமைக்குரியவர். கதிரேசன் ஆலய அறங்காவற்குழுவின் பொருளாளராகப் புனிதமுடன் கடமையாற்றிய சைவச் செம்மல். கதிரேசன் ஆலயத்தில் உற்சவங்கள் பல சிறப்புற நிகழக் காரணராயிருந்தார்.

புதிய ஆலயத்துக்கு அண்மையில் விவேகானந்தசபைக்கென புதிய கட்டடம் அமைவதற்கு ஓயாது உழைத்தார். அரசாங்க அலுவலகங்களில் சேவையாற்றும் சைவமக்கள் மூலமும் படக்காட்சிகள் மூலமும் பெருநிதி சேரப் பணிபுரிந்தார்.

அநுரதபுரம் விவேகானந்த வித்தியாலயத்தை அரசு சுவீகரித்த போதிலும் புதிய நகரில் புதிய வித்தியாலயம் அழகாக அமைய விவேகானந்தசபை பெருமுயற்சி எடுத்தது. விவேகானந்தசபையின் உபதலைவராகவும், விவேகானந்த வித்தியாலயப் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் தனாதிகாரியாகவும் இருந்து இருசபைகளுக்குமிடையே ஒருபெரும் பிணைப்பை ஏற்படுத்தி முன்னேற்றங்காண முயன்றார்.

விவேகானந்தசபைக்கு அருகாமையில் சைவச் சிறார்களுக்கென சாரதாதேவி பாலர் பாடசாலையினை ஆரம்பித்ததற்கு முழுமூச்சுடன் தொழிற்பட்டார்.

தனது ஓய்வு நேரங்களில் இவ்வாறு சமய சேவையைத் தூய்மையாய் ஆற்றினரோ அதுபோலத் தமது உத்தியோகக் கடமைகளையும் முட்டின்றிச் செய்தார். சம்பளத்துக்குக் கடமையாற்றும் சாதாரண ஊழியராயில்லாமல் உண்மைக்குழைக்கும் உத்தம சமூக சேவையாளராகக் காட்சி தந்தார். இருஷி சேவையின் ஆரம்பத்தில் எழுதுவினைஞராய்ச் சேர்ந்து, அம்பதவி உதவி அத்தியட்சகராகப் பதவிஉயர்வு பெற்று இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் பதில் அத்தியட்சகராயும் பணிபுரிந்தார்.

'அன்பு நாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ டைந்துசால் பூன்றிய தூண்'

சான்றாண்மையாளரான சைவப் புரவலர் திரு. சதாசிவம்பிள்ளையின் ஆன்மா சாந்தி பெறுக,

மூ. பசுபதி
(இளைப்பாறிய கணக்காளர்)
உடுவில்

## ஒய்வூதியம் பெறுவோர்சங்கம்

(உடுப்பிட்டி)

இலங்கை அரசினர் ஓய்வூதியம் பெறுவோர் சங்க வடமராட்சிக்கிளையின் நான்காவது வருடாந்தப் பொதுக்கூட்டம் அடுத்தமாதம் 3ம் திகதி நடைபெறும்.

# தந்தை கண்டித்தாராம் யுவதி தற்கொலை

(பண்டத்தரிப்பு)

அயலவர்களுடன் சண்டை பிடிக்காதே ஒற்றுமையாக இரு என்று தமது பருவமகளுக்குப்புத்தி சொல்லிக்கண்டித்தாராம் தந்தை இதைப் பொறுத்துக் கொள்ள மாட்டாத மகள் இருமி நாசினியைக் குடித்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டார். இம் பரிதாப சம்பவம் இளவாலைக் கிராமத்திலுள்ள சிறுவிளான் என்னுமிடத்தில் நடைபெற்றது.

ஐயாத்துரை ஞானமலர் என்னும் 16 வயது இளம் பெண்ணின் இம் மரணவிசாரணை தெல்லிப்பழை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ரா. தம்பிராஜா முன்னிலையில் நடைபெற்ற போது காலமானவரின் தந்தை ஐயாத்துரை சாட்சிய மளித்தார்.

தமது மகள் அடிக்கடி அயல் வீட்டாருடன் வாக்கு வாதப் படுவதாகவும் இதனால் தான் அயலவருடன் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று கூறி அவரைக்கண்டித்ததாகவும் சம்பவ தினத்தன்று வீட்டில் ஒருவரும் இல்லாத நேரம் பார்த்துக் கிருமிநாசினியைக் குடித்தாகவும் அவர் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

காலமானவரின் தாயாரான ஐயாத்துரை பாக்கியமும் சாட்சியமளித்தார் தற்கொலை முன்னைத்தீர்ப்பளிக்கப்பட்டது.

# மாதிரி சுகாதாரக் கிராமம்

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள புலோலிதெற்கை மாதிரி சுகாதாரக் கிராமமாக்கும் முயற்சியில், யாழ். மாவட்ட சுகாதாரத் திட்டக்குழு நடவடிக்கை எடுத்துவருகிறது.

இதற்கு முன்னோடியாக யாழ். மாவட்ட சுகாதாரத் திட்டக்குழு, இலங்கை குடும்ப நலத்திட்டச் சங்கத்துடன் இணைந்து இன்று காலை ஆசிரியர்கள், கிராமசேவையாளர்கள், வெளிக்கள, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கொன்றை புலோலி தெற்கில் ஆரம்பித்துவைக்கவுள்ளது.

இக்கருத்தரங்கு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வி. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. வடமாநில கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் பிரதமவிருந்தினராகக்கலந்துசிறப்புரை வழங்குவார்.

# மதுரை தேர்தலில் கூட்டு இல்லை

## முஸ்லிம்லீக் அறிவிப்பு

சென்னை, மே 26

மதுரை மாநகராட்சிமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முஸ்லிம் லீக் எந்தக் கட்சியுடனும் தான் கூட்டுச்சேரப் போவதில்லை என்று அறிவித்துள்ளது.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸும் தானிஎக் கட்சியுடனும் இத்தேர்தலில் கூட்டுச்சேரப் போவதில்லை என அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (உ)

## கி. மூ. சங்கங்கள் புனரமைப்பு

(உடுப்பிட்டி)

வடமராட்சி தெற்கு-மேற்குப் பகுதியிலுள்ள சகல கிராம முன்னேற்றச்சங்கங்களையும் புனரமைப்புச் செய்து இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி தெற்கு-மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகம் மேற்கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம் மாதம் 31ம் திகதி, துன்னாலை தெற்குக் கிராமமுன்னேற்றச் சங்கம் உதவி அரசாங்க அதிபரினால் புனரமைப்புச் செய்து வைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கிராம முன்னேற்றச் சங்கப்புனரமைப் வைபவத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. இராஜலிங்கமும் கலந்துகொள்வார்.

## ''துன்பம் நேர்கையில்...''

(சுழிபுரம்)

''எத்தகைய துன்பங்கள் நேரிட்டாலும் இறைவனைப் பூரணமாக நம்பினால் அவை யாவும் நீங்கிவிடுமென்ற அடிப்படைக் கருத்தை மாணவர் மனதில் நன்கு பதிக்கவேண்டும்'' என்று பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய அதிபர் வித்துவான் மு. நவரத்தினம், அங்கு நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசை விழாவில் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார். மூளாய் இராமலிங்கம், 'சமணரைக் கழுவில் ஏற்றியமை' பற்றி விரிவுரை நிகழ்த்தினார்.

## இலங்கை ஆலோசனை

நியூயோர்க், மே. 26

1980-ம் ஆண்டு உலக ஆயுதபரிகரண ஆண்டாகப்பிரகடனம் படுத்தப்படவேண்டும் ஐ நா சபையில் நேற்று நடைபெற்ற விசேடமாநாடு ஒன்றில் உரையாற்றியஇலங்கைப்பிரதிநிதிஜனாப்ஏ. சி. எஸ். ஹமீத் ஆலோசனை கூறியுள்ளார். (உ)

## ஓய்வுபெறுகிறார்

(சரவணை)

சுன்னாகம் "ஸ்கந்தவரோதய" கல்லூரியில் கடந்த முப்பது ஆண்டுகளாகவும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இரண்டரை ஆண்டுகளாகவும் கடமை புரிந்த வித்துவான் திரு இ ஆறுமுகம் அடுத்த முதலாந்திகதியிலிருந்து ஓய்வு பெறவிருக்கிறார்.

தமிழ் இந்துநாகரிகம் ஆகிய பாடங்களில் மாணவர்களுக்கு நற்கல்வியை ஊட்டி மாணவர்களின் நன்மதிப்பைப்பெற்ற இவர் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்டவர்.


**Regal** (Jaffna)
Daily at 4-45, 7-00 and 9-30 p.m. only
**LIBERATION**
(Cinemascope color)

**ராணி** (யாழ். நகர்)
காட்சிநேரங்கள் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகிறோம்
சிவாஜி — மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — நிர்மலா
நடித்த
**வந்தாட்டம்**

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
**கிரகப்பிரவேசம்** (கலர்)

**விடேர்** போன்: 7692
சிவகுமார், அல்கா
(யாழ். நகர்)
**மதனமாளிகை**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) வெற்றிகரமான
தினசரி 4 காட்சிகள் 4வது வாரம்
முத்துராமன் — சந்திரகலா
நடித்த
**காலங்களில் அவள் வசந்தம்**
உலகச் செய்திகளும் காண்பிக்கப்படும்.
(கலர்)
Also Showing World news in colour

சில தினங்கள் மட்டும்
**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ
நடித்த
**ஊருக்கு உழைப்பவன்**

**வின்ஸர் — யாழ்ப்பாணம்**
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — மஞ்சுளா — நாகேஷ்
நடித்த
**எங்க தங்க ராஜா**

**சாந்தி** யாழ். நகர் — போன் 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, நம்பியார், நாகேஷ்
**ராமன்தேடியசீதை**
மே 27-28 திகதிகளில் காலை 8-30 மணிக்கு மட்டும் Finist the Falcon

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30 p. m.
James Coburn & James Mason
in
**Cross of Iron**

# 30 ஆயிரம் யார் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன

## மானிப்பாய் ப. நோ. கூ. ச: தலைவர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)
எங்கள் சங்கத்தில் 30,000 யார் துணி விற்பனை செய்யாமல் தேங்கி கிடக்கிறது இவற்றை விற்பனைசெய்யக்கூடாது என கூட்டுறவு உதவி ஆணையாளர் கட்டளையிட்டுள்ளார். ஒரே நிறத்திலும் ஒரே தரத்திலும் ஒரே டிசைனிலுமுள்ள இத்துணிகளை மாற்றித்தரவோ திருப்பி எடுக்கவோ மறுத்து விட்டனர். மக்களும் விரும்பி வாங்குகிறார்களில்லை.

கூட்டுறவு புனரமைப்பு விசாரணைக்குழுமுன் சாட்சியமளித்த மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுசங்கத்தலைவர் திரு. எஸ். இவகுரு மேற்கண்டவாறு கூறினார்.

துணிவாங்கும் போது நீங்கள் பார்த்து வாங்கவில்லையா என அமைச்சர் தேவநாயகம் கேட்டபோது எல்லாத்துணியும் மூடிக்கட்டி சீல் வைக்கப்பட்டுத்தான் தங்களுக்கு விற்பனை செய்யப்படுவதாக திரு சிவகுரு கூறினார்,

### பண்டத்தரிப்பு நெறியாளர்

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்க நெறியாளர் திரு மாம்பிடின் செல்லையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் நடைமுறைத்திய அமைப்பு நீடிக்கப்பட வேண்டும்.

### விற்பனையில் 50 வீதம் வீழ்ச்சி

50 சத வீதமான பங்கீட்டு புத்தகங்கள் வாபஸ் பெறப் பட்டுவிட்டதால், கூட்டுறவு சங்கங்களில் வியாபாரம் மந்த நிலையடைந்துள்ளது ஒவ்வொரு கிளையிலும் வியாபாரம் 50 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது:

கூட்டுறவு சங்கங்களை பாதுகாக்கவும் சுமார் 50000 கூட்டுறவு ஊழியர்களுக்கு வாழ்வளிக்கவும் மா, சீனி உள்ளூர் உற்பத்தியான பால் வகைகள், பங்கீட்டு பொருட்கள் சிலெந்து விற்பனையில், கூட்டுறவு சங்கங்களுக்கு ஏகபோக உரிமையளிக்கப்பட வேண்டும் இறக்குமதி செய்யப்பட்ட துணிகளில் 75 வீதம் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்க வேண்டும்.

### ஒவ்வொரு சங்கத்திற்கும் பெற்றோல் நிலையம்

ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு பெற்றோல் நிலையம் கையளிக்க வேண்டும்.

### பொதுமுகாமையாளர் இடமாற்றம் வேண்டும்

மனேஜர்கள் சங்க எல்லைக்குள் 2 வருடத்திற்கு ஒரு தடவை மாற்றப்பட வேண்டும். பொதுமுகாமையாளர்கள் 3 வருடத்திற்கு ஒரு தடவை அந்த தொகுதியிலுள்ள மற்றச்சங்கத்திற்கு மாற்றப்படவேண்டும்.

சோர்வு தொடர்பாக கடும் தண்டனை அவசியம் 250ரூபா சோர்வு 14 நாட்களுக்குள் கட்டப்பட வேண்டும். 100 ரூபா அபராதம் செலுத்தப்பட வேண்டும் 250 ரூபா முதல் 750 ரூபாவரையான சோர்வு 1 மாதத்தில் கட்டப்படவேண்டும் ஒரு சம்பள உயர்வு நிறுத்தப்பட வேண்டும். 750 ரூபாவிற்கு மேலாக சோர்வு ஏற்படுபவர் பதவி நீக்கம் செய்யப்படவேண்டும். 1 மாதத்திற்குள் சோர்வு கட்டப்படாவிடின் மோசடி தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்.

2 முதல் அவுன்ஸ்வரை நிறையில் சோர்வு ஏற்பட்டால் 100 ரூபா அபராதம் கட்டவேண்டும். 4 அவுன்சுக்கு மேல் ஏற்பட்டால் வேலைநீக்கம்செய்யப்படவேண்டும்.

பணியாளர் ஆணைக்குழு கடமைகள் பரவலாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு உதவி ஆணையாளர் பிரிவிலோ அல்லது மாகாணத்திலோ பரவலாக்கப்பட்ட பணியாளர் ஆணைக்குழு கந்தோர் குறிப்பான நியமனம் தொடர்பாக இயங்கவேண்டும்.

கொழும்பிலுள்ள பணியாளர் ஆணைக்குழு தலைமைக் காரியாலயம், பணியாளர்களின் புகார்கள் பற்றி விசாரணை செய்வதற்கு இருக்க வேண்டும்.

### 3 வருடத்திற்கு ஒரு நெறியாளர் குழு

நெறியாளர் குழு ஒவ்வொரு 3 வருடத்திற்கு ஒருமுறை தெரிவாகவேண்டும்.

விசாரணை உத்தியோகத்தரை அல்லது வழக்கு நடத்தும் உத்தியோகத்தரை தங்கள் கைக்குள் போட முயலுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க கூட்டுறவு சட்டவிதி சேர்க்கப்படவேண்டும்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் சார்பில், திரு. பி. நாகேந்திரன், திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம், திரு. மு. வேலாயுதபிள்ளை, திரு. இராசரத்தினம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

பரந்தன் மாவட்ட குழுத் தலைவர் பண்டிதர் ஆதிநாதர், செயலாளர் திரு. புஷ்பநாதன் இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர் திரு சி. இராசரத்தினம், மாதகல் ஐக்கியநாணய சங்க பிரதிநிதி திரு. தம்பு, அல்வாய் சமூகசேவை லீக் சார்பில் திரு. இ. பாலசிங்கம் ஆகியோர் நேற்று பிற்பகல் சாட்சியமளித்தனர்.

[இவர்களின் சாட்சியம் 29-5-78 ஈழநாடு இதழில் வெளிவரும்.] (க-இ)

# அரச லிகிதர் சேவை சங்கம்: வாசுதேவ கோஷ்டி வெற்றி

(வண்ணார்பண்ணை)
நேற்றுமாலை யாழ்ப்பாணத்தில் நடந்த அரசாங்க லிகிதர் சேவைச்சங்க யாழ் கிளையின் பொதுக்கூட்டத்தில் நடந்த நிர்வாகிகள் தெரிவில் வாசுதேவ கோஷ்டியைச் சேர்ந்தவர்களே தெரிவுசெய்யப்பட்டனர். செயற்குழு வாக்குகள் எண்ணப்படவில்லை.

யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடந்த இக்கூட்டத்திற்கு கிளைத்தலைவர் திரு.வே. பொன்னம்பலம் தலைமைதாங்கினார்.

வாசுதேவ நாணயக்கார கோஷ்டிக்கும், என். எம். பெரேரா கோஷ்டிக்கு மிடையில் நிர்வாகிகள் தெரிவில் பலத்த போட்டிகள் நிகழ்ந்தன:

தலைவர் தெரிவுக்கு இச்சங்கத்தின் நீண்டகால உறுப்பினரான திரு சு. கணேசன் என். எம். கோஷ்டியிலும், கடந்த ஐந்துவருடம் தலைவராக இருந்த திரு வே. பொன்னம்பலம் வாசுதேவ கோஷ்டியிலும் போட்டியிட்டனர். முதலில் தலைவர் தெரிவுக்கான வாக்குச்சீட்டுக்கள் எண்ணப் பட்டபோது உறுப்பினர்கள் மத்தியில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

வாசுதேவ கோஷ்டியைச் சேர்ந்த திரு. வே. பொன்னம்பலம் 13 அதிகப்படியான வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டார். இதைத்தொடர்ந்து இதே கோஷ்டியைச் சேர்ந்த செ. திலகரத்தினம், கா. மகாரத்தினம் உபதலைவர்களாகவும், க. இராசதுரை செயலாளராகவும் வி. எஸ். கனகரத்தினம் உதவிச்செயலாளராகவும், இ. மகேஸ்வரா பொருளாளராகவும், க வே. தம்பிராசா துணைப்பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தாய்ச்சங்க பொதுச்சபைப் பிரதிநிதிகளாக இதே குழுவைச்சேர்ந்த க. தம்பிராசா, வே. கந்தசாமி, வி. எஸ். கனகரத்தினம், ந. இ. யூ மேன்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுக்கான வாக்குகள் எண்ணி முடிக்கப்படாததால் திங்கட்கிழமை வரை இதற்கான வாக்குச்சீட்டுக்கள் சீல் பண்ணப்பட்டு தேர்தல் உத்தியோகத்தரால் எடுத்துச்செல்லப்பட்டன. இத் தேர்தலை திரு. வி. இ. பரமநாதன் தலைமைதாங்கி நடத்தினார்.

இத்தேர்வையிட்டு கொழும்பிலிருந்து வந்த தாய்ச்சங்க பிரதிநிதிகளும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தனர்.

### அட்டனில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
வாமதேவனை நீதிபதிமுன் கைவிலங்குடன் அழைத்து வந்தமைக்காக நீதிபதி பொலிசாரைக் கண்டித்ததை அடுத்து வாமதேவனின் கைவிலங்கு அகற்றப்பட்டது. (ம-இ)

### கல்வியில்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஊரி அதிபர்கள் மகாநாட்டில் தெரிவித்துள்ளதை மிகவும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன், கல்வி இலாகாவில் தனியார் பாடசாலைகளுக்கென தனிப்பிரிவொன்று நிறுவப்பட விரும்புவதாகவும். இக்கல்லூரிகளில் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இவ்வெட்பாரபட்சம்பளமும், பரீட்சைகளுக்கு மேற்பார்வை செய்யும் சந்தர்ப்பமும் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார். இதனை கூடிய விரைவில் அரசாங்கம் நிறைவேற்றும் என்று நாம் நம்புவதுடன் அரசாங்கத்திற்கு நன்றியும் கூறுகிறோம்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் கல்லூரியின் அறிக்கையைச் சமர்ப்பித்துப்பேசிய கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராசா குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் வணக்கத்திற்குரிய சாம் ஹொப்கின்டன் அடிகள் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அதிபர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

கல்வியில் அடிக்கடி சிந்தனையின்றி மாற்றஞ் செய்வதால் மாணவ உலகமும், கல்வித்துறையும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. முன்னைய அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்த என். சி. ஜீ. ஈ, எச். என். டி. ஈ. பரீட்சைகள் உள்நாடு தவிர்ந்த வெளியுலகில் மதிப்பளிக்கப்படாத பரீட்சைகளாக அமைந்தன. தற்போதைய அரசாங்கம் முன்பு இருந்த பரீட்சை முறையை திரும்பவும் நடைமுறைக்குக்கொண்டு வந்ததால் வெளியுலக ஆதரவைப் பெறுவதுடன் மாணவர்களும் பெரும் உற்சாகமடைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்.

### மாணவர்களிடம் அமைதியின்மை

முன்னைய அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதியில் நடைமுறைக்குக் கொண்டுவந்த விகிதமுறையால் மாணவர்களிடையே ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியதுடன் அவர்களிடையே அமைதியின்மையையும் ஏற்படுத்தியது.

லண்டன் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை இவ்வரசாங்கம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்ததை நாம் மனதாரப் பாராட்டுகிறோம். இதன்மூலம் பெருந்தொகையான மாணவர்கள் நன்மையடைவார்கள்.

# என்னுடன் வெளியில் ஓடிய மகள் பிணமாகக் கிடந்தார்

## சன்சோனிக் கமிஷன் முன் தொழிலாளி சாட்சியம்

[கண்டி]
ஆகஸ்ட் 20ம் திகதி என்னோடு வெளியில் போன மகளை பின்னர் பிணமாகத்தான் கண்டேன். என்று உடுவலெல தோட்டத்தைச் சேர்ந்த நீலமேகம் சின்னையா என்பவர் நேற்று கண்டியில் சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

ஆகஸ்ட் 20ம் திகதி அருகிலுள்ள குடியேற்றப்பகுதியிலிருந்து வந்த இளைஞர்கள் தாக்கியதாகவும், தாங்கள் தோட்டத்து பங்களாவுக்குள் ஓடி ஒளித்ததாகவும்சின்னையா கூறினார். வீட்டை விட்டு ஓடியபோது மகள் என்னுடன் வந்தாள். பங்களாவில் ஒளிக்க முதலில் இடமளித்த தோட்டத்துரை பின்னர் அங்கிருந்து வெளியேறும்படி கட்டாயப்படுத்தினார். நாங்கள் அங்கிருந்து ஓடினோம். அப்பொழுது மகளைக்காணவில்லை. இருதினங்களின் பின் கந்தானை என்ற இடத்தில் காகங்கள் பறப்பதைக்கண்டு அங்கே போய்ப் பார்த்தபோது என் மகள் பிணமாகக் கிடப்பதைக் கண்டேன் என்றும் அவர் கூறினார். (உ)

### 13-வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை இசைக் கல்லூரியின் 13வது ஆண்டு விழாவும் பரிசளிப்பும் இன்று தெல்லிப்பழை ஸ்ரீ காசிவிநாயகர் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள இசைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். வளாகப் பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா இவ்விழாவிக் தலைமைதாங்கிப் பேருரை நிகழ்த்திப் பரிசில்கள் வழங்குவார். [இ]

### மணவாளக்கோல விழா

[யாழ்ப்பாணம்]
நல்லூர் நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான 13வது மணவாளக்கோலத் திருவிழா இன்று நடைபெறும்

காலையில் விசேட அபிஷேகமும், இரவு உரையாசிரியர் வை நல்லையாவினுல் கந்தபுராண விரிவுரையும் நடைபெறும். மேளக்கச்சேரியும் இன்னிசையும் நடைபெறும். (க)

### தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பரம்பு அமைச்சின் செயலாளர் திரு. ஷரத் அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளார்

#### யாழ்.மாவட்ட அதிகாரி

யாழ். மாவட்டத்திற்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். (உ)

### மக்கள்—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
வைத்து எல்லா சங்கங்களும் பங்குவகிக்கத்தக்கதாக இருந்தது. இப்பொழுது அப்படியில்லை. இதனால் அங்கத்தவர்களுக்கு சங்கத்தைப்பற்றிய அக்கறையில்லை. அதனால்தான் இந்த இயக்கம் பாழாய்ப்போனது.

எல்லா அங்கத்தவர்களும் தங்களுடைய சங்கம் என்ற மனோநிலையின் அடிப்படையில் செயலாற்றியிருக்கச் சந்தர்ப்பம் இருந்தால் இப்படி நடந்திருக்கமுடியாது. பொதுவாக கிளைச்சங்கம் சம்பந்தமாக ஒரு தீர்மானம் எடுப்பதாக இருந்தால் அந்தக் கிளையுடன் கலந்தாலோசித்த பின்தான் முடிவு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இப்பொழுதுள்ள நிலையில் கிளையைக் கலந்தாலோசிக்காமல் வேறு எங்கோ யாராலோ கிளை சம்பந்தமான முடிவுகள் தீர்மானம்செய்யப்படுகின்றன. இதுவும் அங்கத்தவர்களின் பங்களிப்பைக் குறைத்து வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. [க-இ]


## சீநோர் வலை

கடற்றொழிலாளர் நலன் கருதி நாம் உற்பத்தி செய்யும் வலைகளை எவர் விரும்பினும் அதாவது மீனவர் சங்கங்களும் உத்தரவு பெற்ற விற்பனையாளர்களும் நியமித்த விலைக்கே விற்பதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். மேலும் தொழிற்சாலையில் நேரே வந்தும் இவ்விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்,

வர்த்தக முகாமையாளர்,
சீநோர்.

9405


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் அதனால் [illegible] யாழ்ப்பாணம் ஸ்ரான்லேவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box 49, Jaffna Telegram: Eenaadu Telephone 189 [illegible] Registered as a Newspaper in Sri Lanka.